# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (30.09.2015 முதல் 04.10.2015)

**அறிக்கை எண் 76/2015** **தேதி: 29.09.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 39°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 24°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (30.09.2015 முதல் 04.10.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 82-86 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 78-82 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 30.09.15 | 4 | 33 | 22 | 5 | 84 | 80 | 10 | மேற்கு |
| 01.10.15 | 4 | 32 | 22 | 7 | 86 | 82 | 10 | மேற்கு |
| 02.10.15 | 3 | 33 | 23 | 5 | 82 | 78 | 10 | மேற்கு |
| 03.10.15 | 0 | 33 | 23 | 5 | 82 | 80 | 10 | மேற்கு |
| 04.10.15 | 3 | 33 | 23 | 5 | 84 | 80 | 10 | மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ வானம் அதிக மேகமூட்டத்துடனும், அதிக ஈரப்பதத்துடனும் காணப்படுவதால் மஞ்சளில் நுண்ணூட்டசத்து குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இலை வழி உரமாக ஒரு ஏக்கருக்கு 150 கிராம் பெரஸ் சல்பேட், ஜிங்க் சல்பேட், போராக்ஸ் மற்றும் யூரியாவை 250 லிட்டர் நீரில் கலந்து 25 நாட்கள் இடைவெளியில் மழை இல்லாத நாட்களில் இருமுறை தெளிக்கவும்.
- ✓ தொடர்ந்து மழை பெய்வதால் மஞ்சளில் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவையை செடிகளின் வேரில் ஊற்றவும். மேலும் போதிய வடிகால் வசதியை ஏற்படுத்தவும்.
- ✓ காற்றின் வேகம், ஈரப்பதம் அதிகமாகவும், மேலும் தொடர்ந்து மழை பெய்வதாலும் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 200 கிராம் கார்பன்டாசிம் அல்லது 400 கிராம் மேங்கோசெப் மருந்தினை தெளிக்கவும்.
- ✓ கால்நடை குடில்களில் தண்ணீர் தேங்காமல் பாதுகாக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வானம் அதிக மேகமூட்டத்துடனும், அதிக ஈரப்பதத்துடனும் காணப்படுவதால் மஞ்சளில் நுண்ணூட்டசத்து குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இலை வழி உரமாக ஒரு ஏக்கருக்கு 150 கிராம் பெரஸ் சல்பேட், ஜிங்க் சல்பேட், போராக்ஸ் மற்றும் யூரியாவை 250 லிட்டர் நீரில் கலந்து 25 நாட்கள் இடைவெளியில் மழை இல்லாத நாட்களில் இருமுறை தெளிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**